Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பத்துப்பாட்டில் கட்டடக்கலையும் ஓவியங்களும்

முனைவர் ம. சந்திரசேகரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பல்கலைக்கழகப் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி,
அண்ணா பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 620024. Chandruchellam19@gmail.com

70

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைத் தமிழர் உயர்ந்த வாயில்கள், மதில்கள், அரண்மனைகள், அரண்களைக் கட்டியுள்ளனர்.அரண்மனைகளைப் பாதுகாப்பதற்காக அகண்ட ஆழமான கிடங்குகளையும் காவற்காடுகளையும் அமைத்துள்ளனர்.நுழைவாயில்களை மிகப் பெரிதாகவும் நுண்வேலைபாடுகளுடனும் வடிவமைத்துள்ளனர்.மதில் சுவர்களில் ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளைப் படைத்துச் செம்மாந்த வாழ்வினை வாழ்ந்துள்ளனர்.போர்க் களங்களில் 'பாசறை' வீடுகளை வடிவமைத்துப் போர்த் தொழிலை மேற்கொண்டுள்ளனர் என்பதை,பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளுடன் வெளிப்படுத்துவதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**முக்கியச் சொற்கள்**

மனை, அரண்மனை, கிடங்கு - அகழி, வாயில், மதில், அரண், காவற்காடு, பாசறை, ஓவியம், சிற்பம்.

**முன்னுரை**

பழந்தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தவர்கள்.எனவே, அவர்கள் கண்ட இயற்கைக் காட்சிகளையும் மனிதர்களையும் விலங்குகளையும் தாங்கள் வாழ்ந்த பகுதிகளில் ஓவியங்களாக வரைந்து வைத்தனர்.இதற்குத் தொல்லியல் ஆய்வுகளில் வெளிப்பட்ட குகை ஓவியங்கள், மட்பாண்ட கீறல்கள், ஓவியங்கள் சான்றாகத் திகழ்கின்றன.

கலைகளை, கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, இசைக்கலை, நடனக்கலை எனப் பலவகைகளாகப் பகுப்பர்.இக்கலைகளுள் கட்டடக்கலை, ஓவியக்கலைக் குறித்த பதிவுகளைப் பத்துப்பாட்டின் வழி இக்கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.

**கட்டடக்கலை**

கட்டடக்கலை, பண்பட்ட நாகரிக மக்களின் அடையாளமாகத் திகழ்கின்றது.பழந்தமிழகத்தில் கட்டடக்கலை வல்லுநர்களும் நூல்களும் இருந்துள்ளன.வல்லூநர்கள் 'நூலறிபுலவர்' என அழைக்கப்பட்டுள்ளனர். இதனை,

**நூலறி புலவர் நுண்ணிதின் கயிறுஇட்டு**
**தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி**
**பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்பமனைவகுத்து**
**ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின்** (நெடுநல். 76 – 79)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எனும் அடிகள் புலப்படுத்துகின்றன.இதன்மூலம் மனைகள் வகுக்கும் நூல் விதிகளின்படி வல்லுநர்கள் வாயில்கள், மண்டபங்கள், உயர்ந்த மதில்களைக் கொண்ட அரண்மனைகளை அமைத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**மதில்களும் வாயில்களும்**

மதுரை மாநகரில் வானளாவு உயர்ந்த மதில்கள் இருந்துள்ளன.அதில் பல படைகள் இருந்தன.மதில் கதவிலுள்ள விளக்குகளுக்கு நெய்யூற்றி எரிப்பதால் திண்மையான கதவுகள் கருமையாகக் காணப்பட்டன.மேகங்கள் தவழும் மலை போன்று உயர்ந்த மாடங்கள் இருபக்கமும் இருந்துள்ளன.அதன் இடையில் வையை ஆறு போன்று மக்களும் மாவும் போய்வருவதற்கு ஏற்ற அகண்ட வாயில் இருந்துள்ளது. இதனை மதுரைக்காஞ்சி,

**விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை**
**தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை**
**நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்**
**மழையாடு மலையின் நிவந்த மாடமொடு**
**வையை அன்ன வழக்குடை வாயில்** (மதுரை. 352 – 356)

என மொழிகிறது.

தமிழர் உயர்ந்து வளர்ந்த நிரல்பட்ட வாயில்களையும் நீண்ட உயரமான மதில் சுவர்களையும் அமைத்துள்ளனர்.அம்மதிலில் ஞாயிலாகிய மதில் உறுப்புகள் காணப்பட்டுள்ளன.அம்பினையும் வேலினையும் வீசுகின்ற அரண்களை அமைத்துள்ளனர்.இத்தகைய அரண்களைச் சுற்றி ஆழமான அகழி இருந்துள்ளது. இதற்கு அடுத்தாற்போல் பகைவர் சேர்வதற்கு அரிய திரட்சியையுடைய காவற்காடு அமைந்திருந்ததை,

**அருங்கு ழுமிளைக் குண்டு கிடங்கின்**
**உயர்ந்து ஓங்கிய நிரைப்புதவின்**
**நெடுமதில் நிரைஞாயில்**
**அம்பு உமிழ், அயில் அருப்பம்** (மதுரை. 64 – 67)

எனும் அடிகள் எடுத்துரைக்கின்றன. இங்கு, ‘குண்டு கிடங்கு’ என்பது ஆழமான அகழியையும்‘புதவு’ என்பது வாயிலையும் ‘நிரை ஞாயில்’ என்பது மதில் உறுப்புகளையும் ‘அருப்பம்’ என்ற சொல் அரணையும் குறிக்கின்றன.

தொண்டைமான் இளந்திரையனின் கச்சி மூதூர் பாதுகாப்புடைய காவற்காடால் சூழப்பட்டுள்ளது.சுடுமண் செங்கற்களால் கட்டப்பட்ட நுழைவாயிலும் உயர்ந்த புறப்படை வீடும் அதனைச் சுற்றி மதிலும் இருந்துள்ளன.இச்சிறப்பு வாய்ந்த கச்சி மாநகரம் பார்ப்பதற்குப் ‘பலாப்பழம்’ போன்று அமைந்திருந்தது எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார் (பெரும்பாண். 401 – 411). மேலும், இளந்திரையன்,

**புலவர்பூண் கடன் ஆற்றி பகைவர்**
**கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்** (பெரும்பாண். 450 - 451)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இயல்பினன் எனச் சுட்டுகிறார்.இங்கு, 'கடிமதில்' என்றுரைபதன் மூலம் பாதுகாப்பு மிக்க மதில்கள் இருந்துள்ளன என்பதை அறியமுடிகிறது.

சிறுபாணாற்றுப்படை, "ஒய்மான் நாட்டில் உள்ள நெய்தல் நிலத்தின் நீண்ட வழியில் நீலமணி போலும் கழிகள் இருந்துள்ளன.இக்கழிகளைச் சுற்றி ஊர்களும் ஊரைச் சுற்றிக் குளங்களும் மதில் பெயரோடு பொருந்திய எயில்பட்டினத்தைக் காட்சிப்படுத்துகிறது (151 – 153).

சோழன் கரிகால் பெருவளத்தான், சோழ நாட்டிலுள்ள காடுகளை நாடாக மாற்றியுள்ளான்.குளங்களைத் தோண்டி நீர் வளத்தைப் பெருக்கியுள்ளான்.உறையூரில் பெரிய நிலையுடைய மாடங்களை எடுத்து நகரை விரிவுறச் செய்துள்ளான்.கோயில்களைக் கட்டி அங்குக் குடிகளை அமைர்த்தியுள்ளான்.பெரிய வாயில்களோடு சிறுவாயில்களை அமைத்து மதில்தோறும் அம்புக்கட்டுகளை நிறுவியுள்ளான் (பட்டின. 283 – 288).

மதுரையின் நுழை வாயில் மிகப் பெரிதாகக் கட்டப்பட்டுள்ளது.அவ்வாயிலில் வரிந்து கட்டப்பட்ட பந்தும் பாவையும் தொங்கியுள்ளன (திருமுரு. 67 – 69). அரண்மனையின் வாயில்கள் உயர்ந்து காணப்பட்டதை,

**நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்** (பொருந. 66)
**அடையா வாயில் அவன் அருங்கடை** (சிறுபாண். 206)
**நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயில்** (பெரும். 128)
**அடையா வாயில் மிளைசூழ் படப்பை** (பெரும். 401)
**வையை அன்ன வழக்குடை வாயில்** (மதுரை. 356)
**அருங்கடி வாயில் அயிராது புகுமின்** (மலைபடு. 491)

என்கின்ற பத்துப்பாட்டுப் படலடிகள் வழி அறியமுடிகின்றன.

**பாசறை வடிவமைப்பு**

மன்னர்கள் போருக்குச் செல்லும் காலங்களில் அங்குத் தங்குவதற்காக அமைக்கப்படும் வீட்டைப் 'பாசறை' என்பர்.இவ்வீட்டைப் 'படைவீடு' என்றும் கூறுவர். பாசறை வடிவமைப்பினை முல்லைப்பாட்டு, "காட்டாறு சூழப்பெற்ற அகன்ற காட்டில் செடிகளையும் புதர்களையும் வெட்டி, வேட்டுவர் அமைத்த அரண்களை அழித்து, காட்டில் உள்ள முட்களை மதில் போல வளைத்து அரண் அமைத்துள்ளனர். படை வீரர்கள் தங்கும் வீட்டைத் தழைகளால் வேந்துள்ளனர்.இவ்வீடுகள் வரிசையாக இருந்த தெருவின் நாற்சந்தி முற்றத்தில் சிறுகண்யானை காவலாக இருந்துள்ளது (24 - 31).

வீரர்கள்படைவீட்டில், போருக்குப் பயன்படுத்திய விற்களை வரிசையாக நட்டு அதன் மீது தூணிகளைத் தொங்கவிட்டு கூடாரமாக அமைத்து; பல விற்களையும் இணைத்துக் கயிற்றால் கட்டப்பெற்றுள்ள இருக்கைக்குள் இடையே பூத்தொழில் அமைந்த கை வேல்களை நட்டு, கேடயங்களை வரிசையாக நிரைத்துப் பாதுகாப்புச் செய்து; விற்களை அரணாக அமைத்திருந்தனர் (37 – 42).

போர்களத்தில் மன்னர் தங்குவதற்கு அமைக்கப்பட்ட பள்ளியறை, புலிச் சங்கிலி விடப் பெற்ற அழகு மிகுந்த நல்ல படைவீடு.இவ்வீட்டின் ஒரு பகுதியில் மாணிக்க விளக்குகளைத் திண்மையான

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கயிற்றால் கட்டித் தொங்க விட்டுள்ளனர்.இடையே திரைச் சீலையைத் தொங்கவிட்டு, மன்னர் தங்குமிடத்தை இரண்டு அறைகளாகப் பகுத்துள்ளனர்.இத்தகுப் பாசறையை, “உடம்பின் உரைக்கும் உரையா நாவி”னரான மிலேச்சர் பாதுகாத்துள்ளனர்” (62 – 66) என மொழிகிறது.

**ஓவியக்கலை**

அழகுக்கலைகளுள் ஒன்று ஓவியக்கலை.கண்ணால் கண்ட ஒரு பொருளை அப்படியே படமாக வரைந்துகாட்டும் திறன் பெற்றவர் ‘ஓவியர்’ எனப்பட்டார்.தன் கூர்ந்த அறிவால் ஒன்றை நுணிகி நோக்கி வரையும் ஆற்றல் பெற்ற ஓவியர்கள் பழந்தமிழகத்தில் இருந்துள்ளனர். அவர்கள் ‘கண்ணுள் வினைஞர்’ என அழைக்கப்பட்டதை,

**நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்**
**கண்ணுள் வினைஞரும் …. ….** (மதுரை. 517 – 518)

எனும் அடிகள் எடுத்துரைக்கின்றன.ஓவியக்கலைகளைக் கற்றுணர்வதற்கு ஓவிய நூல்கள் இருந்துள்ளன. அந்நூல்களை ஆண்களும் பெண்களும் கற்றுத் தன் திறன்களை வளர்த்துள்ளனர் என்பதை,

**ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்**
**கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை** (மணிமே. 2 : 31 – 32)

என்ற மணிமேகலைக் காப்பிய அடிகள் வழி அறியமுடிகிறது.

‘ஒவ’, ‘ஓவு’, ‘ஓவத்து’, ‘ஓவியம்’ என்கின்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கும் சொற்களாகும். இதனை,

**ஒவத் தன்ன உண்டுறை** (சிறுபாண். 68)
**ஒவத் தன்ன இடனுடை வரைப்பின்** (புறம். 251)
**ஓவத் தன்ன வினைபுனை நல்லில்** (அகம். 98)
**ஓவத் தன்ன உருகெழு நெடுநகர்** (பதிற். 88)
**கண்கலர் ஓவியம் கண்டுநிற் குநரும்** (மணிமே. 3 : 131)
**உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்** (சிறுபாண். 122)
**ஓவு கண்டன்ன இருபெரு நியமத்து** (மதுரை. 365)

என்கின்ற பாடலடிகள் வழி அறியமுடிகின்றன.

ஓவு, ஓவி எனும் சொற்களுக்குத் தமிழ் - தமிழ் அகர முதலி, “ஓவியம், சித்திரம்” எனும் பொருண்மையைச் சுட்டுகிறது (மு. சண்முகம் பிள்ளை (தொ. ஆ.), தமிழ் – தமிழ் அகர முதலி, ப. 235).

**புனையா ஓவியம்**

ஓவியம், ‘புனைந்த ஓவியம்’, ‘புனையா ஓவியம்’ என இருவகைப்படும்.வண்ணங்கள் தீட்டப்பட்டதைப் புனைந்த ஓவியம் என்றும் வண்ணங்கள் தீட்டப்படாததைப் புனையா ஓவியம் என்றும் கூறுவர். நக்கீரர், பாண்டியன்பிரிவால் வாடிய பாண்டிமாதேவி,

**பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்**
**அம்மாசு ஊர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு**
**புனையா ஓவியம் கடுப்ப** (நெடுநல். 145 -147)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எனப் ‘புனையா ஓவியம்’ போல் இருந்ததைக் குறிப்பிடுகிறார். சீத்தலைச் சாத்தனார், “புனையா ஓவியம் புறம் போந்தன்ன” என்று மணிமேகலையைக் கூறுகிறார் (மணிமே. 22 : 88).

**சுவர் ஓவியங்கள்**

பழந்தமிழர் கட்டடக்கலைகளுடன் ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளையும் படைத்துள்ளனர். அரண்மனைகளிலும் சுவர்களிலும் தூண்களிலும் மதில் சுவர்களிலும் ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தியுள்ளனர் என்பதற்கு,

**வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு**
**வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்**
**வெள்ளி யன்ன விளங்கும் சுதைஉரீஇ**
**மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்**
**செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்**
**உருவவ் பல்பூ ஒருகொடி விளைஇ**
**கருவொடு பெயரிய காண்புஇன் நல்இல்** (நெடுநல். 108 – 114)

எனும் பாடலடிகள் சான்று பகர்கின்றன.அரண்மனைகள் வெள்ளை நிறத்தால் பூசப்பட்டுள்ளன.அறைகள் நீலமணி போன்ற நிறத்தையுடையனவாகத் திகழ்ந்துள்ளன.திண்மையான தூண்களும் நீண்ட சுவர்களும் அமைக்கப்பட்டுள்ளன.அச்சுவர்களில் வடிவழகுடைய பலவகைப் பூக்களையும் கொடிகளையும் ஓவியமாக வரைந்துள்ளனர்.இத்தகைய சிறப்புவாய்ந்த இல்லம் காண்போர் விரும்பும் நல்இல்லமாக விளங்கியது.

பெரிய மாளிகை வீட்டுச் சுவர்களில் வெண்சுதையினைப் பூசி வண்ண ஓவியங்கள் வரையப்பட்டதை,

**கயம்கண் டன்ன வயங்குடை நகரத்துச்**
**செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து** (மதுரை. 484 – 485)

என்ற அடிகள் விளம்புகின்றன.

புகார் நகரம் சோழரின் தலை நகரமாகும்.இந்நகரம் அரண்மனைகளையும் மாட மாளிகைகளையும் கொண்டு விளங்கியுள்ளது.மாளிகைகள் அழகிய ஓவியங்களால் அழகுபடுத்தப் பட்டுள்ளன.ஆனால், அம்மாளிகைகள் தேர்கள் ஓடியதால் எழுந்த தூசுகளால் மாசடைந்திருந்தன.அவை வெண்ணீறாடிய யானைகள் போன்று காட்சியளித்தன என்பதை,

**வேறுபட்ட வினை ஓவத்து**
**வெண்கோயில் மாசு ஊட்டும்** (பட்டின. 49 – 50)

எனப் பட்டினப்பாலைக் குறிப்பிடுகிறது.இதன்மூலம் வெண்கோயில் சுவற்றில் வேறுபட்ட தொழில்களையுடைய ஓவியம் புனையப்பட்டதை அறியமுடிகிறது.

புகார் நகரில் வாழ்ந்த செல்வர் வீட்டுச் சுவற்றிலும் மாடங்களிலும் ஓவியம் வரையப்பட்டதை மணிமேகலைக் காப்பியம்,

**சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்**
**மையறு படிலத்து வானவர் முதலா**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி**
**வெண்கதை விளக்கத்து வித்தகர் இயற்றிய**
**கண்கலர் ஓவியம் கண்டுநிற் குநரும்** (மணிமே. 3 : 127 – 131)

எனும் அடிகளில் சுட்டுகின்றன.இங்கு ‘கண்கலர் ஓவியம் கண்டு நிற்குநரும்’ எனும் அடி வழி, புகார் நகர வீடுகளில் வரையப்பட்ட ஓவியங்களைப் பலர் கண்டு வியந்து நின்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

சிறுபாணாற்றுப்படை, “நல்லியக்கோடன் இலங்கை நகருக்குத் தலைவன்; தொன்மையான இலங்கையின் பெயரைக் கொண்டு அமைந்தது நன்மா இலங்கை. இந்நகரை ஆண்ட மன்னருள் சிறந்தவன்; ஓவியக்குடியில் தோன்றியவன்” என்பதை,

**தொன்மா இலங்கைக் கருவோடு பெயரிய**
**நன்மா இலங்கை மன்ன ருள்ளும்**
**மதுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்**
**உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்** (சிறுபாண். 119 – 122)

என்ற அடிகளில் மொழிகிறது.

**கட்டில் ஓவியம்**

பழந்தமிழகப் பாண்டியர் அரண்மனையில் யானை தந்தங்களைக் கொண்டு செய்த தந்தக்கட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.அக்கட்டில் சிலைத் தொழில்நுட்பரால் அழகு படுத்தப்பட்டுள்ளது. கட்டில் மீது விரிக்கப்பட்ட சேக்கையில்அரிமான் வேட்டையாடுவது போன்றும் கட்டடத்தில் முல்லை போன்ற பல வகை மலர்கள் மலர்ந்துள்ளது போலும் ஓவியம் வரையப்பட்டுள்ளது (நெடுநல். 129 – 131).

**முடிவுகள்**

- பழந்தமிழகத்தில் கட்டடக்கலை வல்லுநர்களும் நூல்களும் இருந்துள்ளன. வல்லுநர்கள் ‘நூலறிபுலவர்’ என அழைக்கப்பட்டனர். மனைகள் வகுக்கும் நூல் விதிகளின்படி வல்லுநர்கள் வாயில்கள், மண்டபங்கள், உயர்ந்த மதில்களைக் கொண்ட அரண்மனைகளை அமைத்துள்ளனர்.
- தொண்டைமான் இளந்திரையனின் கச்சி மூதூர் பாதுகாப்புடைய காவற்காடால் சூழப்பட்டுள்ளது. சுடுமண் செங்கற்களால் கட்டப்பட்ட நுழைவாயிலும் உயர்ந்த புறப்படை வீடும் அதனைச் சுற்றி மதிலும் இருந்துள்ளன. இச்சிறப்பு வாய்ந்த கச்சி மாநகரம் பார்ப்பதற்குப் ‘பலாப்பழம்’ போன்று அமைந்திருந்துள்ளது.
- ‘ஒவ’, ‘ஓவு’, ‘ஓவத்து’, ‘ஓவியம்’ என்கின்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கும் சொற்களாகும். தன் கூர்ந்த அறிவால் ஒன்றை நுணிகி நோக்கி வரையும் ஆற்றல் பெற்ற ஓவியர்கள் பழந்தமிழகத்தில் இருந்துள்ளனர். அவர்கள் ‘கண்ணுள் வினைஞர்’ என அழைக்கப்பட்டனர்.
- பழந்தமிழர் கட்டடக்கலைகளுடன் ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளையும் படைத்துள்ளனர். அரண்மனைகளிலும் சுவர்களிலும் தூண்களிலும் மதில் சுவர்களிலும் ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தியுள்ளனர்.

- அரண்மனைகள் வெள்ளை நிறத்தால் பூசப்பட்டுள்ளன. அறைகள் நீலமணி போன்ற நிறத்தையுடையனவாகத் திகழ்ந்துள்ளன. திண்மையான தூண்களும் நீண்ட சுவர்களும் அமைக்கப்பட்டுள்ளன. அச்சுவர்களில் வடிவழகுடைய பலவகைப் பூக்களையும் கொடிகளையும் ஓவியமாக வரைந்துள்ளனர்.
- நல்லியக்கோடன் இலங்கை நகருக்குத் தலைவன்; இந்நகரை ஆண்ட மன்னருள் சிறந்தவன்; ஓவியக்குடியில் தோன்றியவன் எனச் சிறுபாணாற்றுப்படை மொழிகிறது.

**உதவிய நூல்கள்**

1. சோமசுந்தரனார் பொ. வே. **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**, சென்னை : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. துரைசாமிப்பிள்ளை ஔவை சு. 2017.**பதிற்றுப்பத்து**, சென்னை : பூம்புகார் பதிப்பகம்.
3. துரைசாமிப்பிள்ளை ஔவை சு. 2017. **புறநானூறு மூலமும் உரையும்**, சென்னை :திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.
4. சாமிநாதர்உ. வே. 2013. **மணிமேகலை**, சென்னை :டாக்டர் உ.வே. சாமிநாததையர் நூல் நிலையம்.
5. சண்முகம் பிள்ளை மு. (தொ. ஆ.), 1985. **தமிழ் – தமிழ் அகர முதலி**, சென்னை : தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்.